24–ந் தேதி கோவையில் முகாம்

# வளர்க்க முடியாத நாய்களை ஒப்படைக்கலாம்

## விலங்குகள் பாதுகாப்பு இயக்கம் அறிவிப்பு

கோவை, மார்ச். 22–

கோவை விலங்குகள் பாதுகாப்பு இயக்கம் சார்பில் நாட்டு நாய் குட்டிகள் இலவசமாக வழங்கும் முகாம் வருகிற 24–ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) லட்சுமி மில் சிக்னல் அருகில் உள்ள ராம் அப்பார்ட்மண்டில் நடக்கிறது.

இதில் வீட்டில் வளர்க்கப் படும் நாய்கள் ஈன்ற் பராமரிக்க முடியாத குட்டிகள், ரோட்டில் அனாதையாககைவிடப்பட்ட நாய் குட்டிகள் போன்றவை பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

இவ்வாறு வழங்குவதன் மூலம் நாய் குட்டிகளுக்கு ஏற்படும் உயிரிழப்பு தடுக்கப் படுகிறது. மேலும் தெரு நாய்களின் தொல்லையும் குறைகிறது. எனவே பொது மக்கள் தாங்கள் வீட்டில் வைத்து பராமரிக்க முடியாத நாய் குட்டிகளையும், தெருவில் சுற்றித்திரியும் நாய் குட்டிகளையும் முகாமில் கொண்டு வந்து விடலாம்.

முகாமில் இலவசமாக வழங்கப்படும் நாய் குட்டி களுக்கு தடுப்பூசி, பூச்சி மருந்து வழங்கப்பட்டு நன்கு பராமரிக்கப்பட்ட நாய்க் குட்டிகள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்கப்படு கிறது.

மேலும் நாட்டு நாய்கள் நோய் எதிர்ப்பு சக்திமிக்க தாகவும், காவல் காப்பதற்கு கெட்டிக்காரணாகவும், எந்த உணவு வகைகளையும் சாப்பிடக் கூடியதாகவும், நீண்ட ஆயுள் உடையதாகவும் இருப்பதாலும், பராமரிப்பு செலவு குறைவாக இருப்பதாலும் பொது மக்கள் இதனை வாங்கி பயன்பெறலாம் என்று விலங்குகள் பாதுகாப்பு அமைப்பினர் தெரிவித் தனர்.